# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1919 - 2015 ජුනි මස 12 වැනි සිකුරාදා - 2015.06.12

*1919 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 896 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 903 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## மஹர பிரதேச சபை

மேல் மாகாண அரசாங்க சேவையில் மஹர பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேல் மாகாணத்தில் வதியும் தகுதிபெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பளஅளவு (மாதாந்தம்) | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சாரதி | 2 | ரூபா 12,470-10X130-10X145 - 10X160 - 12X170-ரூபா 18,860 (PL3-2006 A) | க. பொ. த. (சா/த)பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங் களில் சித்தியடைந்திருத்தல். மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் மற்றும் வாகனச் சாரதியாக 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) ஆகக் குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். பகல் நேரத்திலும் மற்றும் இரவு நேரத்திலும் சேவையில் ஈடுபடுவதற்கு உடல் ரீதியாக தகுந்த நிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த கண்பார்வை இருத்தல் வேண்டும். நெடுஞ் சாலை சட்ட விதிக் கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |

**2. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த 3 ஆண்டு காலப் பகுதியில் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாமலும் மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியர் சம்பந்தமாக உச்ச வயலெல்லை ஏற்புடையதாகாது.)
(iv) விண்ணப்பதாரர் சிறந்த தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;
(v) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டவராக அல்லது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக இல்லாதிருத்தல் வேண்டும் ;
(vi) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தவோ அல்லது மாற்றங்கள் செய்யவோ அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்யவோ திருத்தம் செய்யவோ மஹர பிரதேச சபையின் செயலாளருக்கு உரிமை உண்டு.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும் ;
(ii) நியமனத் திகதி தொடக்கம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் ;
(iii) விதவை/தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டளைகளுக்கும், மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது மஹர பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

(1) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படும்.
(2) விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகள் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும் :-

விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படுதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரம் ;
(6) ஏனைய தகைமைகள் காண்பிக்கும் சான்றிதழ்கள் ;
(7) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :-**

இந்த அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 12" X 8" அளவிலான தாளில் விண்ணப்பங்களை தயாரித்து அவற்றை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2015.07.06 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன, கடவத்தை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது சேவைத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்) உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். ஏ. கே. என். இந்திரஜித்,
செயலாளர்,
மஹர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஹலகரகஹமுன,
கடவத்தை,
2015, மே 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மஹர பிரதேச சபை**

***மேல் மாகாண அரசாங்க சேவையில்.................................... பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்***

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :-----.
2. நிரந்தர வதிவு மாவட்டம்:-----.
3. நிரந்தர முகவரி:-----.
4. பால் (ஆண்/பெண்) :-----.
5. பிறந்த திகதி :----.
   2015.07.06 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் :-----. மாதங்கள் :-----, நாட்கள் :-----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
7. இலங்கைப் பிரசையானது பிறப்பாலா அல்லது பதிவு செய்யப்பட்டதன் மூலமா? :-----.
8. (i) கல்வித் தகைமைகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

   (ii) ஏனைய தகைமைகள் :-----.
9. தொழில் ரீதியான தகைமை :-----.
10. சேவை அனுபவம் :-----.
    (i) தற்போது வகிக்கும் பதவி :-----.
    (ii) அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
    (iii) அந்தப் பதவியில் சேவைக்காலம் :-----.
    (iv) இதற்கு முன்னர் சேவை செய்த இடம் மற்றும் வகித்த பதவி :-----.

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும், சரியானதும் என வெளிப்படுத்துகிறேன். இந்த ஆட்சேர்ப்பு சம்பந்தமாக என்னால் பிழையான தகவலொன்று அறிவிக்கப்பட்டுள்ளதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது பின்னர் தெரியவந்தால் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : -----.

**ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./ திருமதி/ செல்வி ..................................... தற்போது இந்த அலுவலகத்தில் ..................................... ஆக சேவையாற்றுகின்றார். விண்ணப்பத்தை சிபாரிசு செய்கிறேன்/சிபாரிசு செய்யவில்லை.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோக முத்திரை.

திகதி :-----.

6-321

---

**கல்கமுவ பிரதேச சபை**

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் கல்கமுவ பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்காக இந்த அறிவித்தல் தரப்பட்டுள்ள உரிய தகைமைகளைக் கொண்ட கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(கல்கமுவ பிரதேச சபையில் தற்போது சேவையில் உள்ள நிரந்தர, அமய, தற்காலிக, பதில் கடமை, கட்டணத்துக்கு, சுயேச்சையான ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | தகன ஒப்பரேட்டர் | 1 | (6/2006 IV) PL - 3-2006A பிரகாரம் ரூ. 11,730-10X120-10X130-10X145-12X160- ரூ. 17,600. | க. பொ.த. (சா. தர) பரீட்சை குறைந்தது 2 பாடங்களில் சித்தி. |
| 2 | கல்லறைகள் உதவி | 1 | (6/2006 IV) PL - 3-2006A பிரகாரம் ரூ. 11,730-10X120-10X130-10X145-12X160- ரூ. 17,600. | க. பொ.த. (சா. தர) பரீட்சை குறைந்தது 2 பாடங்களில் சித்தி. |

**2. தேவையான வேறு தகைமைகள்:**

(1) கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஆகக்குறைந்தது 3 வருடங்கள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும்;

(2) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பார்க்கப்படமாட்டாது.);

(3) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(4) விண்ணப்பதாரர் நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்;

(5) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டவராகவோ, அரச, உள்ளூராட்சி/மாகாண அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

3. **சேவைக்குச் சேர்த்துக் கொள்ளலும் விண்ணப்பித்தலும்.-**

(1) சேவை அவசியத்தைப் பொருத்து உரிய முறையிலான நேர்முகப்பரீட்சை, செய்முறை பரீட்சையின் பின்னர் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்;

(2) தற்போது கல்கமுவ பிரதேச சபையில் குறிப்பிட்ட பதவிகளில் அமைய, தற்காலிக, பதில் கடமை, கட்டணத்துக்கு, சேவையில் உள்ள ஊழியர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும்;

(3) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பப்படிவத்தினை 2015.07.03 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்;

(4) விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரங்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்:-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்;
(2) கல்விச் சான்றதழ்;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் இரண்டு ;
(5) தொழில் சார் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

ஏ. பி. நிமல் ரத்னாயக,
செயலாளர்,
கல்கமுவ பிரதேச சபை.

கல்கமுவ பிரதேச சபை அலுவலகம்,
கல்கமுவ,
2015, மே 26.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமேல் மாகாண அரச சேவையில் கல்கமுவ பிரதேச சபையின் .................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. (i) விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களுக்கான பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. (i) பிறந்த திகதி :- வருடம் :----- மாதம் :---- திகதி :----.
   (ii) 2015.07.03 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. பால் (ஆண்/பெண்) :----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.
7. தேசிய இனம் :----.
8. வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவுக் காலம் :----.
9. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? இல்லையாயின் பதிவு செய்யப்பட்டதனாலா என்பது பற்றி ? :----.
10. கல்வித் தகைமை (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-
   (i) சித்தியெய்திய வருடம் /தரம் :-----. வருடம் :-----.
   (ii) க. பொ. த. (சா/த.) பரீட்சை :
   பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க. பொ. த. (உ/த.) பரீட்சை

பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. தொழில் தகைமை மற்றும் அனுபவம் :----.

12. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அந்த சேவைக் காலம் மற்றும் விபரம் :----.

13. நீங்கள் எப்போதாவது அல்லது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

14. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும் பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும் பிழையானதும் என்று இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு ஆளாவேன் என்றும் எனக்குத் தெரியும்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

15. திரு./திருமதி/செல்வி ..................................................... இந்த நிறுவனத்தில் .................................. ஆக சேவையில் உள்ளார். இந்த பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுக்கலாம்/விடுவிக்க முடியாது. அவர் எவ்வித தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை என்று சான்றுப்படுத்துவதுடன் அவரால் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்கிறேன்/சிபாரிசு செய்யவில்லை.

-------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரையினை இடவும்)
திகதி :----.

6-408

---

**யட்டிநுவர பிரதேச சபை**

2015 ஆம் ஆண்டின் மாச்சு 27 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1908 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் IV (ஆ) உள்ளூராட்சிப் பகுதியில் வெளியிடப்பட்ட சுகாதாரத் தொழிலாளர்கள் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

யட்டிநுவர பிரதேச சபையில் உள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகக் கீழே தரப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று வருடங்களுக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சுகாதாரத் தொழிலாளர் | 2 | PL - 1-2006A ரூ. 11,730-10X120-10X130-10X145-12X160-ரூ. 17,600. | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம், தமிழ் மொழி உட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இவற்றில் ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

2. **உடற் தகைமைகள்**: ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நல்ல கண்பார்வையையும் சிறந்த உள மற்றும் உடற் தகைமைகளையும் கொண்டிருப்பதுடன், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றக்கூடிய சிறந்த தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. **ஏனைய தகைமைகள்**:

(i) யட்டிநுவர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 3 வருடங்களுக்கு குறையாத நிரந்தர வதிவைக் கொணடிருத்தல் ;

(ii) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(iii) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

(iv) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(v) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

(vi) குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்பட்டவராகவோ அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.-

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவையும், ஓய்வூதிய உரித்துடையவையுமாகும்;

(ii) நியமனங்கள் 3 வருடகால தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும்;

(iii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தபான விதிக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களங்களது கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

5. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு ஆட்சேர்க்கப்படுவர்.

6. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளைத் தாமே உறுதிப்படுத்தி இணைத்து அனுப்புதல் வேண்டும்:-

(1) பிறப்பு சான்றிதழ்;
(2) கல்விச் சான்றதழ்கள்;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;
(5) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரது சான்றிதழ்;
(6) தொழிற் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள்;
(7) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

பதவிகளுக்கென விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூன் மாதம் 29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர், யட்டிநுவர பிரதேச சபை, எம்பில்மீகம, பிலிமதலாவ" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

டபிள்யு. பி. செனவிரத்ன பண்டார,
செயலாளர் (பதில்),
யட்டிநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டிநுவர,
2015, மே 27.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**யட்டிநுவர பிரதேச சபை**

.................................... பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும்:----.
3. நிரந்தர முகவரி :----.
4. ஆண்/பெண் :----.
5. பிறந்த திகதி :- வருடம் :-----, மாதம் :----, திகதி :----.
6. வம்சாவழியினாலா பதிவினாலா இலங்கைப் பிரசை :----.
7. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க) :-

(i) க. பொ. த. சாதாரண தரம் :

சித்தியடைந்த வருடம் : சுட்டெண் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) ஏனைய தகைமைகள் :

8. தொழிற் தகைமைகள் :----.
9. சேவை அனுபவம் :----.
   1. தற்போது சேவையாற்றும் நிலையம் :----.
   2. வகிக்கும் பதவி :----.
   3. பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
   4. முன்பு சேவை நிலையத்தில் ஆற்றிய பதவி :----.

10. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

11. திரு./திருமதி/செல்வி ..................................................... என்ற விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில் ................................. ஆக பணியாற்றுகிறார். இந்தப் பதவிக்காக அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலான தண்டனைக்கும் உட்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்.

-------,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
நிறுவனம் :----.
திகதி :----.

6-411

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**காலி மாநகர சபை**

*வரவு செலவு திட்டம் குறைநிரப்பு - 2015*

*2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு வருமானமும் செலவுகளும் உள்ளடக்கிய வேலைத்திட்ட குறைநிரப்பு வரவு செலவு அட்டவணை 2015.06.08 ஆந் திகதி முதல் ஏழு நாட்கள் காலி மாநகர சபை அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்காக பகிரங்கமாக வைக்கப்பட்டுள்ளதை மாநகர சபை கட்டளைகள் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம் ) 214 (2) "ஆ" பந்தியின் படி இத்தால் அறிவிக்கின்றேன்.*

*டபிள்யூ. கெலும் செனவிரத்ன,*
*மாநகர சபை முதல்வர், (பதில்)*
*காலி மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*காலி,*
*2015, யூன் 05.*

*6-240*

---

**கண்டி மாநகர சபை**

*தல்வத்த - வலவ்வத்த பாதையை மாநகர சபைக்கு உரித்தாக்கிக் கொள்ளல்.*

*கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர்ப் பிரிவில் கண்டி மாநகர சபை எல்லைக்குள் கண்டி மாநகரிலிருந்து திகன வரை செல்லும் பாதையிலிருந்து ஆரம்பிக்கும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. சிறிசுமன அவர்களால் தயாரிக்கப்பட்ட 2500 ஆம் இலக்க 2002.05.06 ஆந் திகதியிட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை கண்டி மாநகர சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு 2014.04.29 ஆந் திகதி 8 (59) ஆம் இலக்க சபை தீர்மானத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*இந்த பாதையை கண்டி மாநகர சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி தொடர்ந்துவரும் ஒரு மாத காலத்திற்குள் எதிர்ப்புக்கள் இருப்பின் மாநகர ஆணையாளர், மாநகர சபை, கண்டி எனும் முகவரிக்கு எழுத்துமூலம் அறிவிக்குமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.*

*அந்த கால வரையறைக்குள் எவ்வித எதிர்ப்புக்களும் முன்வைக்கப்படாவிட்டால், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 48 (1), (2), (3), (4) உப பிரிவுகளுக்கு ஏற்ப, கண்டி மாநகர சபைக்கு அந்த பாதை உரித்தாகிவிடும் என்பதனையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

*கண்டி மாநகரிலிருந்து திகன நகரம் வரை செல்லும் பாதையிலிருந்து வடகிழக்கு திசை பக்கமாக ஆரம்பிக்கும் பாதை, உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. சிறிசுமன அவர்களால் தயாரிக்கப்பட்ட 2002.05.06 ஆந் திகதிய 2500 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைகள் : வடக்கே : பிரதான பாதை ; தெற்கே : அந்த வரைப்படத்தில் காணித்துண்டு 4 உம் ; கிழக்கே : அந்த வரைபடத்தில் காணித்துண்டு 4 உம் ; மேற்கே : காணித்துண்டு 05 உம் மீண்டும் ; வடக்கே : காணித்துண்டு 5 உம், 4 உம் ; தெற்கே : காணித்துண்டு 6 உம் ; கிழக்கே : வரிமதிப்பு இல. 38, 38/1, 38/2 ஆகிய ஆதனங்களும் ; மேற்கே : காணித்துண்டு இல. 6 உம் மீண்டும் ; வடக்கே : காணித்துண்டு 6 உம் ; தெற்கே : காணித்துண்டு ஏ3 உம் காணித்துண்டு 7 உம் ; கிழக்கே : காணித்துண்டு 6 உம் ; மேற்கே : காணித்துண்டு 7 உம் மீண்டும் ; வடக்கே : காணித்துண்டு 8 உம், 7 உம் ; தெற்கே : காணித்துண்டு 9 உம் 10 உம் ; கிழக்கே : ஏ3 உம் ; மேற்கே : காணித்துண்டு 8 உம் மீண்டும் ; வடக்கே ; காணித்துண்டு 8 உம் ; தெற்கே : காணித்துண்டு 12 உம், 11 உம் ; கிழக்கே : காணித்துண்டு 9 உம் ; மேற்கே : காணித்துண்டு 9 உம் ஆகிய விபரங்களையுடைய முறையே 0 ஏக்கர் 02 றூட் 19.2 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பாதை.*

*சந்தன தென்னகோன்,*
*மாநகர ஆணையாளர்,*
*கண்டி மாநகர சபை.*

*6- 241*

## ஹபராதுவ பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (1) (ஆ) ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தில் ஹபராதுவ பிரதேச சபையால் இதன் கீழே குறிப்பிட்ட உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மங்மாவத் ஹபராதுவ பிரதேச சபைக்குரிய மங்மாவத் பாதை என பிரகடனம் செய்யப்படும் என்று இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*இது பற்றி பிரதேச பொது மக்களால் அல்லது பாதைகளுக்குரிய காணிகள் உரிமைக்கு சொந்தமான நபர்களால் ஏதேனும் எதிர்ப்புக்கள் தெரிவிக்க விரும்பினால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் தனது உரிமையை நிரூபிப்பதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (2) பிரிவின் பிரகாரம் செயல்பட வேண்டும் என்று இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*இந்த காலகட்டத்திற்குள் எதிர்ப்புக்கள் ஏற்படாவிடின் அட்டவணையில் குறிப்பிட்ட வீதி ஹபராதுவ பிரதேச சபைக்குரிய வீதியாக ஏற்றுக்கொண்டு நிருவாகம் செய்யப்படும் என்று பொது மக்கள் அறிந்துகொள்வதற்காக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

இந்திராணி குணசேகர,
செயலாளர்,
ஹபராதுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹபராதுவ.
2015, மே 25.

**அட்டவணை**

| *வீதியின் பெயர்* | *வீதியின் தொடக்கம்* | *வீதியின் முடிவு* | *கிராம அலுவலர் பிரிவு* | *வீதியின் நீளம் கி. மீ.* | *வீதியின் அகலம் மீட்டர்* |
|---|---|---|---|---|---|
| வலகடவத்தை வீதி | ஹெடிவத்தை பிலான வீதி | வீடு | ஊருகஸ்கொட | 0.12 | 4.87 |

6-292

---

## கம்பஹா மாநகர சபை

நிகழ்ச்சி வரவு செலவுத்திட்டம் - 2015

*கம்பஹா மாநகர சபையில் 2015.06.05 ஆந் திகதி நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2015 ஆம் ஆண்டுக்கான உத்தேச வருமானம் மற்றும் மதிப்பிடப்பட்டுள்ள செலவினங்கள் அடங்கிய நிகழ்ச்சி வரவு செலவுத் திட்டம் 2015.05.28 ஆந் திகதி முதல் 7 நாட்களுக்குள் பொது மக்களின் பார்வைக்காக இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை (255 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214(1) இன் கீழ் அறியத்தருகின்றேன்.*

எரங்க செனானாயக,
மாநகர பிதா,
கம்பஹா மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கம்பஹா,
2015, மே 28.

6-360

## பூஜாபிட்டிய பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) அ உப பிரிவின் கீழான அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 24 (1) அ உப பிரிவின்படி மத்திய மாகாணத்தின் பூஜாபிட்டிய பிரதேச சபையினால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை பூஜாபிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமானதென வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இது தொடர்பாகக் குறித்த பாதைக்குரிய காணிகளின் சொந்தக்காரர்களென உரிமை பாராட்டுவோர் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தங்களது உரித்துரிமையைக் காட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தக் கால எல்லைக்குள் இந்த அறிவித்தலுக்கமைய ஏதும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாதவிடத்து, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை பூஜாபிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமானதென ஏற்றுக்கொண்டு பராமரிக்கப்படும் என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படுத்துகின்றேன்.*

*அனுர குமார மடலுஸ்ஸ,*
*தலைவர்,*
*பூஜாபிட்டிய பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பூஜாபிட்டிய,*
*2015, மே 28.*

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | பட்டுகொட பட்டகல்லையைத் தொடர்புபடுத்தும் தெல்கொல்ல பாதை |
| கிராம அலுவலர் பெயர் | : | பட்டுகொட தெற்கு |
| பாதையின் ஆரம்பம் | : | பட்டுகொட தெற்கு சமகி மாவத்தை |
| பாதையின் முடிவு | : | பட்டகல்ல கம்சபா பாதை சமகி மாவத்தை |
| அகலம் | : | 8 அடி - 0 அங்குலம் |
| நீளம் | : | 1770 அடி |

### அட்டவணை

*இடது*

1. திரு. அபேரத்ன என்பவருக்கு உரித்தான காணி
2. திருமதி பி. ஆர். சீலவதி என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியவத்த காணி
3. திரு. பி. ஜீ. சூரசேன என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
4. திரு. ஆர். ஜீ. எஸ். பிரசாத் ரன்கொத் என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
5. திருமதி ஈ. எம். பிரேமா ஹேரத் என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
6. திருமதி யூ. ஆர். ஜீ. யசவதீ என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
7. திரு. டபிள்யூ. எல். தர்மசேன என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
8. எம். என். சரோஜா பிரேமவங்ஸ என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
9. திரு. ஆர். ஏ. கே. ஜயரத்ன என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
10. திரு. பி. ஆர். ஜயசிங்ஹ என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
11. திரு. சரத் வீரசேகர என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
12. திரு. பி. என். குலதுங்க என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி

*வலது*

1. திரு. சுனில் பியசேன என்பவருக்கு உரித்தான காணி
2. கொலகொல்லாபிட்டியே ரஜமகா விகாரைக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
3. திரு. கே. ஜீ. சோமரத்ன என்பவருக்கு உரித்தான இஹல குருக்குதேகெதர காணி
4. திரு. எச். ஸீ. குணரத்ன என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
5. திரு. கே. எம். லீலாரத்ன என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
6. திரு. டபிள்யூ. எல். உபாலி ஏக்கநாயக என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
7. திரு. வை. ஜீ. நிஷாந்த என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
8. திரு. டபிள்யூ. எல். தர்மசேன என்பவருக்கு உரித்தான சேருகஹபிட்டியஹேன காணி
9. எம். என். சரோஜா பிரேமவங்ஸ என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
10. திரு. ஆர். ஏ. கே. ஜயரத்ன என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி

*இடது* *வலது*

13. திரு. பி. ஆர். சமபிகா விக்ரமரத்ன என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
14. திரு. உபசேன தயானந்த என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
15. திரு. பி. ஜீ. எம். கீர்திசிங்ஹ என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
16. திரு. சிறிபால விக்ரமரத்ன என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி
17. திரு. ஆர். ஜீ. பிரேமரத்ன என்பவருக்கு உரித்தான தெல்கொல்லஹேன காணி

6-362

---

## யட்டிநுவர பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (1) (ஆ) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவது பிரிவின்படி மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது பற்றி இப்பிரதேசத்தின் பொது மக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) பிரிவின்படி செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் பற்றிய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லை எனின், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்கு உரித்தான பாதையாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். எம். துசித்த குமார வலகெதர,
தலைவர்,
யட்டிநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டிநுவர,
பிலிமதலாவ,
2015, மே 27.

### அட்டவணை

| தொடர் இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபுறம் | வலதுபுறம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சமகி மாவத்த | கிரிபத்கும்புற மேற்கு | கொழும்பு கண்டி வீதி | கெஹெல் வத்த | வை. எம். திஸ்ஸகுமார<br>ஈ. எம். எஸ். ஆர். திசாநாயக்க<br>யூ. ஹப்புஅரச்சி<br>டி. எம். பி. திசாநாயக்க<br>யூ. சீ. ஜயசுந்தர | கே. எம். விஜேரத்ன<br>ஆர். எம். எம். ரத்நாயக்க<br>ஏ. எம். எம். அபேசேகர<br>பீ. எம். எம். ஹேரத்<br>என். டபிள்யூ. மாரசிங்ஹ<br>ஈ. எம். ஆர். கே. லியனகே<br>ஆர். எம். டிக்கிரிபண்டா<br>எச். ஜீ. அனுலாவதி | 250 | 10அடி | 700 |

| தொடர் இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபுறம் | வலதுபுறம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | சமகி மாவத்த | உட ஈரியகம கிழக்கு | பேராதனை கென்ஹிந்த பாதை | 1851/15 | ரி. எச். எஸ். சீ. தென்னகோன்<br>நீல்டி சில்வா<br>ரி. ஜீ. வீரசிங்ஹ<br>எச். எம். அனுலா குமாரிஹாமி<br>எஸ். எம். புஷ்பகுமார<br>எம். ஏ. சிரியாணி<br>பி. பீ. ஜே. ஜயதிலக்க<br>எஸ். எம். சீ. பீ. குமார<br>டி. ஆர். எஸ். தசநாயக்க சார்பில் நெரஞ்சலா சமன் குமாரி<br>எம். எஸ். குமாரசிங்ஹ சார்பில் | ஜீ. எஸ். கே. பிரதாபசிங்ஹ<br>டபிள்யு. பீ. எம். ஏ. வீரபராக்கிரம<br>டபிள்யு. ஜீ. ஆனந்த<br>கே. சிவமணி<br>எஸ். வயலட்<br>எப். எஸ். அஹமடீன்<br>எச். ஆர். ஏ. எம். அஹமட் | 825 அடி | 15 அடி | 1851/1<br>1851/16 |
| 3 | பஹல போஅங்க வளவ்வத்த பாதை | அரம்பேகம அரம்பேகம கிழக்கு | பஹல போஅங்க தந்துரே பாதை பரோபகார சங்க மண்டப அருகில் | | டபிள்யு. எம். என். பீ. கே. விஜேசுந்தர<br>டபிள்யு. எம். என். பி. விஜேசுந்தர<br>டபிள்யு. ஈ. ஹேமா தயாவதி<br>டபிள்யு. ஈ. சந்திராவதி<br>ஜீ. வி. ஏ. ஜீ. நாணாயக்கார<br>ஆர். எம். எம். ஏ.<br>பி. ஆர். ஏ. பி. வெவேகம<br>எஸ். எம். ஏ. எஸ். சேனாநாயக்க | நந்தா குணசேகர<br>பீ. கே. குணசேகர | 160 | 10 அடி | 2028 |
| 4 | வட்டங்வத்த பாதை | கிரிபத்கும்புர மேற்கு | நானுஓயா குளிக்கும் துறைக்கு இங்கும் சந்தி | திரு. எஸ். கே. சங்கக்கார வினது காணி | எஸ். கே. சங்கக்கார<br>ரி. கே. சங்கக்கார<br>ஆர். எம். ஆர். கே. திசாநாயக்க | கே. எம். கபிலரத்ன பண்டா<br>கே. எம். என். சந்தன பண்டார<br>கே. எம். என். என். குலதுங்க | 62 | 04 | 1614 |

6-412

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.